**செய்தி வெளியீடு எண்:755** **நாள்: 08.11.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (8.11.2017) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறுவில் 12 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 19 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான கூடுதல் கட்டடங்கள், வண்ணமீன் வானவில் தொழில்நுட்ப பூங்கா, நீர் மற்றும் உணவு தர ஆய்வகம் மற்றும் சீனமுறை மீன்குஞ்சு பொரிப்பகம் ஆகியவற்றை திறந்து வைத்து, 14 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வள பொறியியல் கல்லூரிக்கான கட்டடங்கள், வண்ணமீன் வானவில் விற்பனைக் கடைகள் மற்றும் காட்சிக்கான நிலையம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மீன்வளத்தில் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைந்திடும் வகையில், மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன்வளத்தைப் பாதுகாத்தல், நீடித்த வளங்குன்றா மீன்பிடிப்பினை உறுதி செய்தல், நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளை மேம்படுத்துதல், உள்நாட்டு மீன் விற்பனை வசதிகளை வலுப்படுத்துதல், மீன்வளப்பிரிவில் மனிதவள மேம்பாட்டை வலுப்படுத்துதல் மற்றும் மீனவர்களின் நலன்களையும் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறுவில் 12 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வுக்கூடம், வகுப்பறைக் கட்டடங்கள், நூலகக் கட்டடம் மற்றும் இதர துறைக் கட்டடங்கள்;

மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் 8 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வண்ணமீன் வானவில் தொழில்நுட்ப பூங்கா;

ஈரோடு மாவட்டம் – பவானிசாகரில் உள்ள வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நீர் மற்றும் உணவு தர ஆய்வகம் மற்றும் சீனமுறை மீன்குஞ்சு பொரிப்பகம்;

என 19 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டம் – முட்டத்தில் உள்ள மீன்வள பொறியியல் கல்லூரியில் 13 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள வகுப்பறைகள், கருத்தரங்குக் கூடம் மற்றும் நூலகக் கட்டடம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள வண்ணமீன் வானவில் விற்பனைக் கடைகள் மற்றும் காட்சிக்கான நிலையம் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு.பி. பலராமன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 8.11.2017